

சுருக்க அறிக்கை

# இந்தியா-யூகே கிரியேட்டிவ் இண்டஸ்ட்ரீஸ் 75

திட்டம்

## திட்ட சுருக்கம்

## சுருக்க அறிக்கை

# இந்தியா-யூகே கிரியேட்டிவ் இண்டஸ்ட்ரீஸ் 75

## திட்டம்

> *Dilon ke beech na deewar hai, na sarhad hai;*
> *dikhayi dete hain sab fasley nazar ke mujhe*

**இதயங்களுக்கு இடையில் வரம்புகளும் இல்லை, சுவர்களும் இல்லை; தூரம் என்பது புலனுணர்வே.**

ஜாபர் சஹ்பாய்

இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தையொட்டி ‘75ல் இந்திய– இங்கிலாந்து படைப்புத் தொழிலகங்கள்: வாய்ப்புகளும் சிக்கல்களும்’ என்ற திட்டத்தின் கீழ் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் படைப்புத் தொழிலகங்களில் பணிபுரியும் கலைஞர்கள் ஒன்றிணைந்தனர். இத்திட்டம் – திரைத் தொழிலகங்கள், நேரலை செயல்திறன் மற்றும் பேஷன் ஆகிய மூன்று உட்கூறுகளுடன் அமைக்கப்பட்டது. இந்தியா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த கலைஞர்கள், இயற்பியல் எல்லைகளையும், சமய மண்டல வரம்புகளையும் கடந்து ஒன்றிணைந்தனர். அவர்கள் ஒன்றிணைந்து பல்வேறு கருத்துகள் உள்ளடங்கிய 9 சிறு படைப்பு வெளியீடுகளை உருவாக்கினர். இந்த 9 மாத குறுந்திட்டம் எங்களுக்கு ஆக்கப்பூர்வமான கண்டுபிடிப்புகளையும் தொழில்முறை உறவுகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் பயணமாக அமைந்தது. இக்கூட்டுறவிலிருந்து பிறந்த கருத்துக்கள் ஒத்துழைப்பாகவும் கவரும் விதமாகவும் இருந்தன. இக்கலைஞர்கள் எல்லைகளைத் தாண்டி ஒன்றிணைந்து, திரைப்படம், ஊடகம், நாடகம், நடனம், கலை, கவிதை, பேஷன் முதலிய துறைகளில் ஆக்கப்பூர்வமாக பணியாற்றினர். இக்குறும்படைப்புகளின் பன்முகத்தன்மையும் படைப்பாற்றலும் ஊக்கமளிக்கும் விதமாக உள்ளன. எல்லையே இல்லாத கலையின் மெய்ப்பொருளை அவை இணைக்கின்றன. இத்திட்டம், அனைத்து எல்லைகளையும் கடந்த, மேலும் இதுபோன்ற பல கூட்டுறவுகளை ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்.




எங்களின் திட்டத்தைப் பற்றி மேலும் விவரங்களை அறிய:
https://www.bcu.ac.uk/media/research/research-groups/creative-industries/research-projects/india-uk-creative-industries-at-75

# படைப்பு வெளியீடு

இத்திட்டத்தின் 9 படைப்பு வெளியீடுகளின் இணைய இணைப்புகளை இங்கு அணுகலாம்:
https://www.bcu.ac.uk/media/research/research-groups/creative-industries/research-projects/india-uk-creative-industries-at-75/project-creative-outputs

## உட்கூறு 1 - திரைத் தொழிலாகங்கள்:

இந்த உட்கூறு, திரையின் உதவியோடு, எல்லைகளைத் தாண்டி இருக்கும் சில சுவாரசியமான கதைகளைக் கூறி, அவற்றிலுள்ள இணைப்புகளும் ஒற்றுமைகளும் கண்டறியப்பட்டன. எடுத்துக்காட்டாக - இந்த துணைக்குழுக்களில் ஒன்று, இந்தியா மற்றும் இங்கிலாந்து முழுவதும் உள்ள பாலினம், சாதி, பாலியல் சார்ந்த சிக்கல்களை மூன்று அறிவார்ந்த குறும்படங்களின் வாயிலாக ஆராய்கிறது. மேலும் அறிய, கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்புகளை பார்க்கவும்.

## உட்கூறு 2 - நேரலை செயல்திறன்கள்:

இவ்வுட்கூறு இங்கிலாந்து மற்றும் இந்தியக் கலைஞர்களை, இசை, நடனம் மற்றும் கவிதையியலில் ஈடுபடுத்தியது. நேரம் மற்றும் இட வேறுபாடுகள் இருப்பினும், இக்கலைஞர்கள் கலையின் வழியாக இணைப்புகளைக் கண்டறிந்தனர். எடுத்துக்காட்டாக, ஒரு படைப்பு வெளியீடு, ஆண்- பெண் துறவிகளின் 'சூஃபி' மாயக் கருத்தினை மறுவரையறை செய்துள்ளது. இப்படைப்பு வெளியீட்டின் மூலம் கலைஞர்கள் இந்த மாயக்கருத்தின் பாலின இருமைகளை மறுவிளக்கம் செய்திருக்கின்றனர்.

## உட்கூறு 3 - பேஷன் தொழிலாகம்:

இவ்வுட்கூற்றில், இந்திய-இங்கிலாந்து எல்லைகளுக்கிடையில் உள்ள பேஷன் இணைப்புகள் ஆராயப்பட்டன. குறைவாக அறியப்பட்ட கலைகளின் மறுமலர்ச்சி மற்றும் பாதுகாப்பு முதல் சுற்றுசூழலுக்கு உகந்த உள்ளூர் சாயங்கள் மற்றும் பச்சை குத்தல்கள் வரை பரந்த அளவிலான பாடங்களில் இத்துணைக்குழு ஆய்வு செய்தது. இவற்றில் ஒரு துணைக்குழு, எல்லைகளைத் தாண்டி வழக்கிலிருக்கும் பச்சை குத்தும் கலையைப் பற்றி ஆராய்ந்தது. பச்சை குத்தல்கள் எளிமையான நாகரிகத்தையும் தாண்டி, இந்தியா மற்றும் இங்கிலாந்தில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களின் அடையாளம், பாரம்பரியம்,வரலாறு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டவைகள் என்று அவர்கள் கண்டறிந்தனர்.





# படைப்புத் தொழிலகங்கள்

படைப்புத் தொழிலகங்கள், ஆக்கப்பூர்வமான பொருளாதாரம், ஆரஞ்சு எகானமி என்பவைகள் என்ன? இத்தொழில்கள் திரைப்படம், ஊடகம், விளம்பரம் செய்தல், கைவினைகள், இசை, வானொலி, தொலைக்காட்சி, காணொலி விளையாட்டுகள் மற்றும் பல கலைகளுடனும் கலைஞர்களுடனும் ஈடுபடுகின்றன. மேலும் தகவல்களை அறிய ஆர்வமாக உள்ளீர்களா? ஒருவேளை உங்களுக்கு இவற்றில் ஒரு படைப்புத் தொழிலில் ஆர்வம் இருக்கலாம்? மேலும் உத்வேகத்தைப் பெற கீழே கொடுக்கப்பட்டுள்ள எங்கள் படைப்பாளிகள் மற்றும் கலைஞர்கள் சிலரின் வேலை மற்றும் சுயவிவரங்களைக் காணுங்கள்:

1. மாலா சின்ஹா
2. ரவீட்டா பங்கர்
3. மண்சில் மிஸ்டிக்ஸ்
4. சௌரவ் ஷர்மா
5. சங்கினி குமார்
6. லோட்டஸ் விசுவல் புரொடக்ஷன்ஸ்

இந்த திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து எங்களுடன்இணைந்திருக்கும் கலைஞர்களின் தகவல்கள் பின்வரும் இணைப்பில் கிடைக்கின்றன: https://www.bcu.ac.uk/media/research/research-groups/creative-industries/research-projects/india-uk-creative-industries-at-75/meet-the-team

Tamil translation by Hamshika. B (Fresh Graduate), BCom. (Hons.), SRCCC College, University of Delhi.

Report designed by Nick Drew Design

